


**30. 01. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் 78ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காந்தியடிகளின் சுதேசி கொள்கை சுய சார்பு பாரதத்திற்கு அடித்தளமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

2. இந்திய அரபு நாடுகளின் மூத்த அதிகாரிகளின் உயர்நிலை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

3. சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2 ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான திட்ட பணிகளை துவக்கிவைத்து புதிய பணிகளுக்கு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

4. தேசிய குற்ற ஆவணத்தின்படி தமிழகத்தில் குறைந்த அளவிலேயே குற்ற செயல்கள் நடைபெற்றுள்ளதாக மாநில மக்கள்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

5. வாஷிங்டனில் நடைபெறும் ஸ்குவாஷ் மகளிர் காலிறுதியில் இந்தியாவின் அனஹத் சிங் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

*****************

காந்தியடிகள் நினைவு தினம்

தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் 78ஆவது நினைவு தினம் தியாகிகள் தினமாக இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி புதுதில்லி ராஜ்கட்டில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டே தலைவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

சர்வமத பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

தியாகிகள் தினமாக இத்தினம் கடைபிடிக்கப்படுவைதை ஒட்டி நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த சுதந்திர போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இன்று அஞ்சலி செலுத்தப்படுகிறது.

காந்தியடிகளின் சுதேசி கொள்கை வளர்ச்சி அடைந்த சுய சார்பு பாரதத்திற்கு அடித்தளமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூகவலைதள பதிவில் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

காந்தியடிகளின் பணிகள் நாட்டு மக்களுக்கு என்றென்றும் உத்வேகமாக இருக்கும் என்றும் கூறினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தமது செய்தியில் மொழி பிராந்தியம் ஜாதிவாரியாக பிரிந்திருந்த தேசத்தை ஒருங்கிணைத்து சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்துச்சென்றவர் என்று பாராட்டியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமது செய்தியில் காந்தியடிகளின் எளிமை, அகிம்சை, சமத்துவ கொள்கைகள் தேசத்தை கட்டமைக்க என்றென்றும் உந்துசக்தியாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

சென்னை எழும்பூரில் உள்ள காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி ஏற்கப்பட்டது.

****************

தொழுநோய் தினம்

தேசிய தொழுநோய் ஒழிப்பு தினமாகவும் இந்நாள் கடைபிடிக்கப்படுவதை ஒட்டி பல்வேறு மாவட்டங்களில் தொழு நோய் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றனஃ.

தர்மபுரி மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தொழுநோய் ஒழிப்பு பேரணியை தொடங்கிவைத்தார்.

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தொழுநோய் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

தொழுநோயை முற்றிலும் ஒழிக்க வீடுதோறும் நடைபெறும் கணக்கெடுப்பு பணிகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு தொழுநோய் மருத்துவ பணிகள் துணை இயக்குனர் மருத்துவர் ப்ரீத்தா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

****************

அரபு மாநாடு

இந்தியா – அரபு வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அரபு முன்னனி உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

புதுதில்லியில் முதல்முறையாக இந்தியா சார்பில் இத்தகைய கூட்டம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

பஹ்ரைனில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தை தொடர்ந்து 10ஆண்டுகளுக்கு பின்னர் இந்த கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் பெறுகிறது.

ஒத்துழைப்பு, பொருளாதாரம், எரிசக்தி, கல்வி, ஊடகம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஆலோசனைகளும் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற உள்ளன.

வெளியுறவு அமைச்சர்களின் இக்கூட்டத்தின் மூலம் ஒத்துழைப்பும் நட்புறவும் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தின் முன்னோடியாக 4ஆவது இந்திய அரபு நாடுகளின் மூத்த அதிகாரிகளின் உயர்நிலை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

இதனிடையே இந்திய அரபு அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் பங்கேற்க கத்தார், லிபியா

நாடுகளின் அமைச்சர்கள் இன்று புதுதில்லி வந்தடைந்தனர்.

ஏற்கனவே பாலஸ்தீனம், சூடான், நாடுகளின் அமைச்சர்கள் நேற்று புதுதில்லி வந்தனர்.

இதனிடையே வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அரபு நாட்டின் தலைமை செயலருடன் பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பு குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்.

பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து இதில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

****************

மாவோயிஸ்ட்

சட்டிஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இன்று போலீஸாரிடம் சரணடைந்தனர்.

தங்களிடமிருந்து நான்கு ஆயுதங்களையும் காவல்துறையினரிடம் அவர்கள் ஒப்படைத்தனர்.

****************

பிரகதி

மத்திய அரசின் ஆளுமையையும், திட்ட செயலாக்கத்தையும் விரைந்து முன்னெடுத்து செல்ல வகை செய்யும் பிரகதி திட்டத்தின் கீழ் ஜல்சக்தி துறையின் செயல்பாடுகள் வெற்றிகரமாக முன்னேறி செல்கின்றன.

தற்போது இரண்டு லட்சத்து 86 ஆயிரத்து 346 கோடி ரூபாய் முதலீட்டில் நீர்வளம் சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நதிகள் மேம்பாடு, கங்கை எழுச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரகதியின் கீழ் மொத்தமுள்ள 66 திட்டங்களில் 43 ஆயிரத்து 583 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுடன் 10 முன்னோடி திட்டங்கள் பிரதமரின் ஆய்வின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

பல்வேறு பிரச்சனைகளுக்கு சுமூகதீர்வுடன் இத்திட்டங்கள் அனைத்தும் படிப்படியாக வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வது குறிப்பிடத்தக்கது..

*****************

முதலமைச்சர்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2 ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்து திட்ட பணிகளை தொடங்கிவைத்து புதிய பணிகளுக்கு

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

205 கோடி ரூபாய் மதிப்பில் 15 ஆயிரத்து 453 பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

சிராவயல் கிராமத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியடிகள் திருவுருவ சிலையுடன் கூடிய ஜீவா நினைவரங்கத்தையும் முதலமைச்சர் இன்று திறந்துவைக்கிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

முன்னதாக சென்னையில் தனியார் தொலைக்காட்சியின் இரண்டு நாள் கருத்தரங்கை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் தமிழ்நாடு முழுவதும் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு அனைத்து பகுதிகளும் வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஊரக பகுதிகளிலும் சிறப்பான உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தொலைநோக்கு பார்வையுடன் பொதுமக்களுக்கு தேவையான திட்டங்களை அரசு உருவாக்கி வருவதாக கூறிய முதலமைச்சர் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்வதாக கூறினார்.

****************

சுப்பிரமணியன்

தேசிய குற்ற ஆவண பதிவேட்டின்படி தமிழகத்தில் மிக குறைந்த அளவிலேயே குற்ற செயல்கள் நடைபெற்றுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் உள்ள 36 மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகத்தில் மிக குறைந்த அளவிலான குற்ற செயல்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்காலிக ஊழியர்களின் போராட்டம் ஒருசிலரின் தூண்டுதலால் நடைபெறுவதாகவும், போராட்டங்கள் என்பது இயல்பாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தல் நடைபெற உள்ள சூழலில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையில் தூண்டிவிடப்படும் போராட்டங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதே தமது நோக்கம் என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்..

முன்னதாக அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசனுடன் இணைந்து சென்னை கோட்டூர் புரத்தில் கட்டப்பட்டு வரும் ஆயிரத்து 800 புதிய அடுக்குமாடி திட்ட பகுதியையும் அவர் ஆய்வு செய்தார்.

****************

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் மாணாக்கரின் கல்வி வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

நாகை மாவட்டத்தில் 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடங்களை இன்று திறந்துவைத்து பேசிய அவர், புதிய கட்டமைப்புகளை பயன்படுத்தி மாணாக்கர் முன்னேற்றப்பாதையில் செல்ல அறிவுறுத்தினார்.

****************

கீதாஜீவன்

தூத்துக்குடி மாவட்டம் புதியம் புத்தூரிலிருந்து - வாஞ்சிமணியாச்சி ரயில்நிலையம் வரை 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 கிலோமீட்டர் நீள சாலை திட்டத்தை மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்களை அவர் வழங்கினார்.

****************

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தலைமையில் போதை பொருட்கள் இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு வில்லைகள் வாகனங்களில் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருப்பத்தூர் நகர பேருந்து நிலையத்தில் போதை பொருட்களின் தீமைகள் குறித்து எடுத்துரைக்கும் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகம் சார்பிலான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் தேசிய சட்டப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணாக்கர் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்டத்தில் மாநில அளவிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு போட்டிகள் நாளை நடத்தப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

*****************

பழனி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா நாளை மறுநாள் நடைபெறுகிறது.

இதையொட்டி பாதை யாத்திரையாக லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு குவிந்தவண்ணம் உள்ளதால் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக கோவில் இணை ஆணையர் திரு.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*****************

ஸ்குவாஷ்

வாஷிங்டனில் நடைபெறும் ஸ்குவாஷ் ஆடவர் காலிறுதியில் இந்தியாவின் வீர்சோட்ரானி இங்கிலாந்தின் டெக்லனை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் காலிறுதியில் அனஹத் சிங் - எகிப்தின் சானா இப்ராஹிம்முடன் மோதுகிறார்.

****************

டென்னிஸ்

மெல்பர்னில் நடைபெறும் ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச் – இத்தாலியின் ஜானிக் சின்னரை இன்று எதிர்கொள்கிறார்.

தற்போது நடைபெறும் மற்றொரு அரையிறுதியில் ஸ்பெய்னின் அல்கராஸ் – ஜெர்மனியின் ஸவ்ரவை எதிர்கொண்டுள்ளார்.

****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது